## சேலம் வரைவாளர் இல்ல வரலாறு

**அன்பார்ந்த அனைத்து நிலை வரைதொழில் அலுவலர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்**

எனது பணிக்காலங்கள் சேலம், திருச்சி மற்றும் சேலத்தில் பணி செய்து ஓய்வு பெற்றேன். சேலம், திருச்சியில் நிலநீர் ஆய்வுக் கோட்டங்களில் 18 ½ ஆண்டு காலம் பணி புரிந்து பின்னர் பணி மாறுதலில் சேலம் மேல்காவிரி வடிநில வட்ட அலுவலகத்திற்கு மாறுதலில் அக்டோபர் 1998ல் பணியில் சேர்ந்து 31.05.2014 வரை இளநிலை வரைதொழில் அலுவலர், வரைதொழில் அலுவலர் மற்றும் முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வில் பணிபுரிந்த ஓய்வு பெற்றேன். எனது பணிகாலத்தில் சங்கத்திற்கு ஆற்றிய பணிகள் விவரங்கள் தொகுத்து காட்டுகிறேன்.

நான் மேல் காவிரி வடிநில வட்ட அலுவலத்தில் பணி புரிந்து வருவதை அறிந்த சேலம் (க ஃ ப)கோட்டத்து முதுநிலை வரைதொழில் அலுவலராக (HD) அவர்கள் நேரில் வந்து அவரது அலுவலகத்திற்கு அழைத்து சென்றார். அய்யா யாரிடமிருந்து சொல்லி அனுப்பியிருந்தால் நானே உங்களை வந்து பார்த்திருப்பேன என்றேன். அதனால் என்ன பரவாயில்லை என்று கூறிவிட்டு என்னை அழைத்து சென்று நீவிர் திருச்சியில் பணிபுரிந்த காலத்தில் வரைவாளர் இல்லம் அமைக்க சஙக நிர்வாகிகளுடன் சேர்ந்து பாடுபட்டாய். ஆனால் சேலத்தில் வரைவாளர் இல்லம் அமைக்க உமக்கு எண்ணம் தோன்றவில்லையா என திட்ட மற்றும் வடிவமைப்பு வட்ட அலுவலகத்தில் HD ஆக பணிபுரிந்த திரு. எம். கந்தசாமி அவர்களுடம் திரு.சாமியப்பன் HD அவர்களிடம் என்னிடத்தில் கேட்டனர். அய்யா நீங்கள் இருவரும் கட்டளையிடுங்கள் செய்ய காத்திருக்கிறேன் என்று அவர்களிடத்தில் கூறினேன். இதற்கிடையில் 2000 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஈரோட்டில் நமது சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்திற்கு சேலத்திலிருந்து சுமார் 12 பேர்கள் சென்று கலந்து கொண்டனர்.

அதே திங்களில் சேலத்தில் ஒப்பந்த மேலாண்மை கருத்தரங்கு நடத்த தீர்மானித்து திரு.சாமியப்பன் HD அவர்கள் தலைமையில் நடந்தன. அந்த கருத்தரஙகிற்கு மாநில தலைவர் தெய்வத்திரு. திரு. ந.சேதுராமசாமி திரு. சண்முகம், திரு. மீ.அ. வடிவேலு, கருணாமூர்த்தி, திரு. எஸ். ராகுநாத சேஷாத்திரி, தஞ்சாவூர் சாமிநாதன் HD ஆகியோர்களை அழைத்து மிக சிறப்பாக நடத்தப்பட்டன. காலை 8.50 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கிற்கு பொள்ளாச்சி, நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலிருந்து சுமார் 200 உறுப்பினர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். அப்போதுதான் மீ.அ.வடிவேலு அவர்கள் திரு. கி. ரவிச்சந்திரன் வரைதொழில் அலுவலர் அவர்களிடம் திரு. கா. கந்தன் அவர்கள் சிறப்பாக



This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

செயல்படுகிறார் இவரை வைத்து சேலத்தில் வரைவாளர்கள் இல்லம் கட்ட ஏற்பாடு செய்யலாமே என்று கூறினார். அதன்பின்னர் சேலம் கிளைச் சங்கத் தேர்தல் நடைபெற்றது. திரு. சாமியப்பன் அவர்கள் தலைவராகவும், திரு. கா. கந்தன் செயலாளராகவும் திரு.கி.ரவிச்சந்திரன் மத்திய செயற்குழு ஊறப்பினராகவும், திரு.சு. இளங்கோவன் பொருளராகவும் தேர்வு செய்யப்பட்டு கிளைச் சஙகம் செயல்பாட்டுக்கு வந்தது. அப்போதுதான் கிளைச் சங்கத்திற்கு வரைவாளர்கள் இல்லம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. திரு. சாமியப்பன், திரு. எம்.எஸ்.சிட்டிபாபு, திரு. திலிப்குமார், திரு.ரவிச்சந்திரன், திரு சி.வி.சொக்கையா மற்றும் நான் உட்பட சேலம் கட்டட (க ϕ ப) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாண்டியன் அவர்களையும், சேலம் கட்டட (க ϕ ப) கோட்ட செயற்பொறியாளர் திரு.சோமசுந்தரம் அவர்களையும், சேலம் கட்டட (க ϕ ப) உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.சத்தியேந்திரன் அவர்களையும் கூட்டாக நேரில் சந்தித்து எங்கள் சங்கத்திற்கு வரைவாளர் இல்ல கட்டடம் கட்ட உரிய அனுமதி கோரினோம். அதற்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் உங்கள் கோரிக்கை நியாயமானதுதான் என்று கூறிவிட்டு எங்கு இடம் கேட்கிறீர்கள் என்று கேட்டார். பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் உதவிச் செயற்பொறியாளர் மின் உபகோட்டத்திற்கும் பொறியியல் இல்ல கட்டடத்திற்குமிடையில் உள்ள இடம் காலியாக உள்ள அந்த இடத்தினை எங்களது சங்கத்திற்கு வழங்குங்கள் என்று கோரினோம். உடன் கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் உரிய மூன்று அலுவலர்களும் இடத்தினை பார்வையிட்டு இந்த இடம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும் எனஎண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தெரிவித்து இரண்டொரு நாட்களில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை அவர்கள் சேலத்திற்கு ஆய்வுக்கு வர உள்ளார் அவர்களிடத்தில் உங்கள் கோரிக்கைகளை நானே முன் நின்று அவர்களிடத்தில் தெரிவிக்கிறேன். நீங்கள் நான்கு, ஐந்து பேர்கள் வாருங்கள் என்று தகவல் தெரிவித்துள்ளார். அதன்படி தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திரு.சகாதேவன் அவர்கள் வந்தவிட்டதாகவும் நீங்கள் சுமார் 8 மணிக்கு ஆய்வு மாளிகைக்கு வரவேண்டும் என கண்காணிப்புப் பொறியாளர் தகவல் தெரிவித்தார். அதன்படி திரு. சக்திவேல், ரவிச்சந்திரன், சி.வி.சொக்கையா, இளங்கோவன், சிட்டிபாபு மற்றும் நான் உட்பட ஐந்து போர் சென்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்களை நேரில் சந்தித்தோம். தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் திரு.பாண்டியன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களிடம் என்ன கோரிக்கை என்று கேட்டார். அதற்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் வரைவாளர்கள் சங்கத்திற்கு ஒரு கட்டடம் வேண்டும் என தெரிவித்து நமது பயணியர் மாளிகை வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கேட்கிறார்கள் என்று தெரிவித்தார். உடன் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களிடம் அவர்கள் கட்டடம்



This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

கட்டுவதற்கு தேவையான இடம் உள்ளதா எனக் கேட்டார். இடம் உள்ளது என கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தெரிவித்தார். அதற்கு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் எங்களிடம் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களே இடம் உள்ளது என தெரிவித்தார். எனவே நீங்கள் யாருக்கும் தெரிவிக்காமல் காதும் காதும் வைத்தது போல் உடனே கட்டடத்தை கட்டி முடியுங்கள் என்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அவர்கள் அனுமதி அளித்தார். இனிமேல் காலம் கடத்தாமல் விரைவில் வரைவாளர் கட்டடம் கட்டப்படவேண்டும் என கிளைச் சங்க உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி முடிவு எடுக்கப்படவேண்டும் என தீர்மானித்து கிளைச் சங்க உறுப்பினர்கள் இளநிலை வரைதொழில் அலுவலர்கள் ரூ.1000/-, வரைதொழில் அலுவலர்கள் ரூ.2000/-, முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் ரூ.3000/-, தலைமை வரைதொழில் அலுவலர் ரூ.5000/- என நிர்ணயித்து கட்டடம் கட்ட பூமி பூஜை கார்த்திகை மாதம் 8 ஆம் தேதி திரு.கே.கே.எம்.தாமோதரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தினோம். அதன்பின் கட்டடக் குழு அமைக்கப்பட்டு திரு.ந.சக்திவேல் அவர்கள் தலைவராகவும், திரு.ரவிச்சந்திரன் அவர்கள் செயலாளராகவும், திரு.சு.இளங்கோவன் பொருளாளராகவும் ஏகமானதாக நியமித்து செயல்பட்டனர். கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவினங்களை கணக்கீட்டு ரூ.3.40 இலட்சத்திற்கு கட்ட ஆகும் என திரு டி.சண்முகவேல் அவர்களை கட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டது.

கட்டடம் சுமார் நான்கு மாத காலத்திற்குள் கட்டி முடித்து எங்களிடம் ஒப்படைத்தார். அவர்களுக்கு கட்டுமான செலவுத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் பின் கட்டட திறப்பு விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு 2002ஆம் ஆண்டு 24.03.2002ல் திறப்பு விழாவுக்கான அழைப்பிதல் மையச் சங்கத்தின் மூலம் தயார் செய்து அனைத்து கிளைச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. சங்கக் கட்டட திறப்பு விழாவானது திரு.பாண்டியன் கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தலைமையிலும், திரு.சோமசுந்தரம் செயற்பொறியாளர், திரு.சத்தியேந்திரன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பான முறையில் நடைபெற்றது. சங்க கட்டட திறப்பு விழாவிற்கு உள்ளூர் சங்கங்களின் அனைத்து நிர்வாகிகளையும் அழைத்து பேச வைத்து கவுரவப்படுத்தினோம். நான் 1998 அக்டோபர் திங்கள் முதல் 31.05.2014ம் ஆண்டு வரை கிளைச் சங்க செயலாளராக முழு அளவில் பணிபுரிந்து வந்துள்ளேன். அதன்படி 20.11.1998 முதல் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் மாநிலத் தலைவராக திரு. சுந்தரராமன் அவர்களும், மாநில பொதுச் செயலாளர் N.P.புண்ணியமூர்த்தி அவர்களும் மற்ற நிர்வாகிகளும் ஏகமானதாக தேர்வு செய்யப்பட்டனர்.



This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

அதன்பின் 23.04.2022ல் வேலூரில் நடைபெற்ற மையச் சங்க பொதுக் குழு கூட்டத்தில் சுமார் திரு.கி.ரவிச்சந்திரன் தலைமையில் 15 பேர் கலந்து கொணடோம். அதன்பின் தொடர்ந்து இரண்டு முறை மதுரையில் நடந்த மையச்சங்க பொதுக் குழு கூட்டத்தில் சென்னையிலிருந்து மாறுதலாகி கட்டட வட்ட அலுவலகத்தில் தலைமை வரைதொழில் அலுவலராக பணிபுரிந்த கிளைச் சங்கத் தலைவராக தேர்வு செய்யப்பட்டனர். திரு.தி.பன்னீர்செல்வன் தலைமை வரைதொழில் அலுவலர் அவர்கள் தலைமையில் சுமார் 20 பேர் கலந்து கொண்டோம். அதன்பின் கோவையில் வரைவாளர் இல்லம் கட்ட பூமி பூஜை நடைபெற்றது. அதில் திரு.தி. பன்னீர்செல்வன், திரு.கா.கந்தன் அவர்களும் கலந்து கொண்டு சுமார் ரூ.40000/- வழங்கப்பட்டது. பின்பு கட்டட திறப்பு விழாவிற்கு திரு.தி. பன்னீர்செல்வன், திரு.கா.கந்தன் அவர்களும் கலந்து கொண்டு நான் (கா.கந்தன்) ரூ.2000/, திரு.தி. பன்னீர்செல்வன்-ரூ.5000/- அவர்கள் நன்கொடை வழங்கினோம். தொடர்ந்து மையச் சங்கத்தின் மூலம் நடைபெறும் கூட்டங்களில் திரு.தி. பன்னீர்செல்வன் அவர்களும், நானும் தவறாது கலந்து கொண்டு வந்துள்ளோம். அதன்பின் மையச் சங்க நிர்வாகிகளால் செயற்கையரிய செயல்களின் மூலம் 1982க்குப் பிறகு இளநிலை வரைதொழில் அலுவலர் பணிக்கு உரிய திருத்த ஆணையை அரசிடம் பெற்று முதல் தவணையாக 375 பேர் இளநிலை வரைதொழில் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது மிகப்பெரிய சாதனையாகும். வரைவாளர் கையேடு நாளது திங்கள் வரை விவரங்களை சேகரித்து முழு அளவில் புத்தக வடிவில் தயார் செய்து பொள்ளாச்சியில் நடைபெற்ற மையச் சங்க குழு கூட்டத்தில் வெளியீட்டு விழா நடைபெற்றது. திரு.எஸ்.கே. கலைச்செல்வன் மாநில பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் கோவையில் சிறப்பான வரைவாளர்கள் இல்லம் அனைவரும் பாராட்டும் விதத்தில் கட்டி முடித்துள்ளார். தற்போது மையச் சங்க நிர்வாகிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு அனைத்து நிலை வரைவாளர்களுக்கும் பதவி உயர்வு பெற்றுத் தந்துள்ளனர். இச்செயல்களை நிறைவேற்றியதற்கு மையச் சங்க நிர்வாகிகளை மனமாற பாராட்டி வாழ்த்தி தெரிவித்துக் கொள்வதோடு மேலும் சங்கப் பணியில் ஈடுபடுவேன் எனத் உறுதிகூறுகிறேன்.

மிகவும் நன்றி,

இப்படிக்கு,

(கா. கந்தன்)
பொதுப்பணித்துறை
முதுநிலை வரைதொழில் அலுவலர் ஓய்வு மற்றும்
முன்னாள் கிளைச் சங்க செயலாளர், சேலம்



This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)

**TAMILNADU DRAUGHTSMEN'S ASSOCIATION**

Salem Branch, Salem - 636 007.

**INAUGURAL FUNCTION OF SALEM VARAIVALAR ILLAM**

# Invitation

# "Varaivalar Illam"

*Constructed inside the Inspection Bungalow Campus, Hasthampatty, Salem is proposed to be inaugurated at 10.30 a.m. on 24.3.2002 (Sunday)*

*By*

**Er. R. PANDIYAN,** B.E., F.I.E., F.I.V.,

Superintending Engineer, PWD,
Building ( C& M ) Circle, Salem-7.

**&**

**Thiru. K. SHANMUGAM,** L.C.E.,

State President, TNDA, Chennai,

*Will Preside over the Function Senior Engineers, present and former office-bearers of the Central Body & Salem Branch of TNDA and Office Bearers of Sister Associations will participate and Offer Felicitations.*

We request you to kindly participate and grace the function.

Building Committee,
And
President, Secretary and Office Bearers
of Salem Branch, TNDA



This document is downloaded from Tamilnadu Draughtsmen\'s Association Website (www.tnda.co.in)